பக்கங்கள் : ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (25.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 118

# வாகரை, திருமலை மக்கள் அரச தரப்பின் பலவந்தத்தினாலேயே மீளக்குடியமர்ந்தனர்

## ஐ.நா. அமைப்புகள் கூட்டாக நடத்திய ஆய்வு மதிப்பீட்டின் மூலம் ஊர்ஜிதம்

கொழும்பு,மார்ச் 25

**வாகரை மற்றும் திருமலை மக்களை அரசாங்கம் பலவந்தப் படுத்தியே - அழுத்தம் கொடுத்தே - பயமுறுத்தியே அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றியது.**

**ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளான, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம், மனிதாபிமான முகவர் ஒன்றியம் ஆகிய மூன்றும் கூட்டாக நடத்திய ஆய்வு மதிப்பீடு இதனை ஊர்ஜிதம் செய்துள்ளது.**

ஐ.ஏ.எஸ்.ஸி. எனப்படும் முகவர்கள் குழுக்களின் அமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வாகரை, திருமலைப் பகுதிகளில் இப்போது மீளக்குடியமர்ந்த மக்களிடம் கருத்தறியும் - உண்மை நிலை அறியும் - கணிப்பு ஒன்றை யு.என்.எச்.சி.ஆர்., யுனிசெவ், ஒச்சா ஆகிய மூன்று ஐ.நா. அமைப்புகளும் சேர்ந்து நடத்தின.

அதன் பிரகாரம் மீளக்குடியமர்ந்துள்ள மிகப் பலரும் அரசாங்கத் தரப்பின் பலவந்தம், பயமுறுத்தல், அழுத்தம் காரணமாகவே தாம் மீளக்குடியமர்ந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

கருத்தறியும் கணிப்பின் மூலம் பின்வரும் வகைகளில் மக்கள் மீளக்குடியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர்.

★ அகதிகள் தமது சொந்த விருப்பத்திலன்றி தாங்கள் மீளக்குடியமரச் செல்லாமல் தங்கி நின்றால் அவர்களுக்கான அரச உதவிகள் நிறுத்தப்படும் என்ற அச்சம் காரணமாகவே உடன்பட்டனர்.

★ அகதிகள் திருப்பி அழைத்துச் செல்லப்படும் நாள்களில் இராணுவத்தினரும் பொலீஸாரும் மக்கள் தங்கியிருந்த இடங்களில் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர்.

★ அகதிகள் அழைத்துச்செல்லப்படும்

(06ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை அதன் விருப்பத்துக்கு மாறாக எவரும் பயமுறுத்த முடியாது!

### ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடரில் தயான் ஜெயதிலக்கா

ஜெனிவா,மார்ச்.25

ஜனநாயக நாடான இலங்கையை, அதன் விருப்பத்துக்கு மாறாக குறிப்பிட்ட செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறோ, சில அமைப்புக்களை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும்படியோ கட்டாயப் படுத்தவோ, திணிக்கவோ, பயமுறுத்தவோ முடியாது. ஒரு போதும் நாம் இடம் தரப் போவதுமில்லை

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கடுந்தொனியில் தெரிவித்தார் இலங்கைக்கான ஜெனிவாவின் புதிய பிரதிநிதியான தயான் ஜெயதிலக்கா.

ஏதாவது செயல்திட்டங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமாயின் இலங்கை அரசாங்கத்தின் சம்மதத்துடனேயே செய்யப்படவேண்டும் என்றும் அவர் கனத்த குரலில் கூறினார்.

இலங்கையில் மனித உரிமைகள் மிகவும் மோசமாக மீறப்படுவதாக மேற்படி கூட்டத் தொடரில் பல அமைப்புகள் சுட்டிக்காட்டி இருந்தன.

அவற்றுக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே புதிய தூதுவர் தயான் ஜெயதிலக்காவின் உரை அமைந்தது.

எமது நாட்டில் உள்ள நிலைமைகளை சீர்செய்வதற்கு நாம் அனைத்துலகத்தின் உதவிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். அது ஒரு திறந்த ஜனநாயக சமூகம். தற்கொலைதார பிரிவினைவாத படையினருக்கு எதிராக எம்மை தற்காத்து வருகின்றோம். எம்மால் ஓர் உறுதியான சமூகத்தை அமைக்க முடியாத் சந்தர்ப்பங்களில் அனைத்துலகத்தின் ஆதரவுகளை நாம் வேண்டி நிற்கிறோம் - என்றும் அவர் சொன்னார்.

இலங்கையில் காணாமல்போதல்கள் கொழும்பிலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் எனவே, இதனை விசாரணை

(06ஆம் பக்கம் பார்க்க)

## பெரியதம்பனை முன்நகர்வை முறியடித்ததாகப் புலிகள் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 25

வவுனியா - மன்னார் எல்லையில் இருந்து, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பெரியதம்பனைக்கு முன்நகர்ந்த படையினர் தமது பழைய நிலைக்குத் திரும்பிவிட்டனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்நகர்ந்து வந்த படையினருக்கும் தமது அணிகளுக்குமிடையில் நடைபெற்ற 15 மணிநேரச்சமரையடுத்துப் படையினர் தமது நிலைகளுக்குத் திரும்பிவிட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் -வவுனியா எல்லைப் பிரதேசமான இரணை இலுப்பைக்குளம், பிரமணாளங்குளம் ஆகிய இராணுவ நிலைகளில் இருந்து முன்னேறிய படையினர் பெரிய தம்பனைப் பகுதிவரை முன்னேறினர் எனப் படைத்தரப்பு வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

முன்னேறிய படைகளுடன் அன்று இரவு வரை மோதல்கள் தொடர்ந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் இடம்பெற்ற கடும் மோதல்களை அடுத்துப் படையினர் பழைய நிலைக்கு வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்கு முன்னதாகத் திரும்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் இரவு 10.30 மணி வரை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் மூலம் படையினரின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

**முன்நகர்வு முறியடிப்பு**

படையினரின் முன்நகர்வை முறியடிக்கும் தாக்குதலை, அவர்களை வழிமறித்து, பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, முறியடிப்புத் தாக்குதலை நடத்தினோம். -

இத்தாக்குதலில் பாரிய இழப்புக்களுடன்

(06ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் காவலரண் அருகே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

### சிப்பாய் ஒருவர் பலி; ஐவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

யாழ்.நகரில் நேற்றுமுற்பகல் இராணுவத்தினரின் வீதிச் சோதனைக் காவலரண் பகுதிக்கு மிகச் சமீபமாக தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். நான்கு படையினர் காயமடைந்தனர். பொதுமகன் ஒருவரும் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் ரயில்வே தண்டவாளத்துக்கு அருகில் (நாவலர் வீதி - மணிக்கூட்டுச் சந்திக்குச் சமீபமாக) உள்ள இராணுவத்தின் வீதிச் சோதனைக் காவலரணுக்கு அருகிலேயே நேற்றுமுற்பகல் 9.45 மணியளவில் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது.

குண்டுதாரியைச் சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின்பேரில் சோதனையிட முயன்றபோது அவர் தப்பி ஓட முயன்றதாகவும் சிப்பாய் அவரைப் பிடிப்பதற்காக நெருங்கியபோது குண்டு வெடிக்கவைக்கப்பட்டதாகவும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலி, புதிய சிவன் கோயில் வீதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கஜரூபன்(வயது 21) என்பவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நடைபெற்றபோது அந்தப் பகுதி ஊடாகச் சென்ற மினிபஸ் ஒன்றின் முன் கண்ணாடிகள் சேதமுற்றன.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

கஸ்தூரியார் வீதிப் பக்கம் இருந்து நடந்துவந்த ஒருவர் காவலரணுக்குச் சமீபமாக குண்டை வெடிக்க வைத்தார் என்று விசாரணையின் போது படையினர் தெரிவித்தனர்.

தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் எனக் கருதப்படும் நபரின் தலை காவலரணுக்கு அருகில் உள்ள வடிகாலுக்குள்

(06ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை மக்களின் மறுவாழ்வுக்கு சர்வதேச உதவி கோருகிறார் ஆயர்

### அரச உதவியை எதிர்பார்க்க முடியாதாம்

கொழும்பு, மார்ச்.25

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் மறுவாழ்வுப் பணிகளுக்கு உதவ இலங்கை அரசு முன்வரும் என்று நம்புவதற்கு இல்லை. ஆகையால் அந்த மக்களின் மறுவாழ்வுப் பணிகளை சீராக முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் உதவுமெனக் கோருகின்றோம்.

மட்டக்களப்பு - திருகோணமலை ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை இவ்வாறு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வாகரைப் பிரதேசத்தில் மீள் குடியேறியுள்ள மக்களின் நிலைமையை பார்வையிடுவதற்கென வெள்ளிக்கிழமையன்று ஆயர் தலைமையிலான குழு ஒன்று அங்கு சென்றிருந்தது.

தமது அந்த விஜயத்தை அடுத்து கருத்து வெளியிட்டபோதே ஆயர் சுவாம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

வாகரையில் மீள்குடியேறியுள்ள (06ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை ஊடான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியது

வவுனியா, மார்ச்.25

ஓமந்தை சோதனை நிலையம் மீண்டும் போக்குவரத்துக்காக நேற்று முற்பகல் திறக் கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அப்பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் காரணமாக, மறு அறிவித்தல் வரை இந்தச்சோதனை நிலையம் மூடப்பட்டிருக்கும் எனப் படையினர் அறிவித்திருந்தனர்.

எனினும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நேற்று படை அதிகாரிகளுடனும் (06ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பலில் 400 பேர் செல்லலாம்

திருகோணமலை, மார்ச் 25

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடு படும் 'கிறீன் ஓஷன்' என்ற கப்பலில் 400 பயணிகள் பிரயாணம் மேற்கொள்ள இப் போது வசதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இந்தக்கப்பலில் 350 பேர் பயணம் செய்யவே [illegible] (06ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனம் மீது கிளைமோர் தாக்குதல்

### மன்னார் அகதிகளைப் பார்த்து திரும்பியவேளை சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 25

மன்னார் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த அகதிகளுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொண்டு திரும்பிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கிளைமோர் தாக்குதலுக்குள்ளாகியது.

இத்தாக்குதலில் அந்த வாகனத்தின் சாரதியான முத்துராசா அருள்வேஸ்வரன் (வயது - 30, பூநகரி) கொல்லப்பட்டார்.

இந்த வாகனத்தில் சென்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிர்வாகப் பணிப்பாளர் வடிவேல் ரவிச்சந்திரன்(வயது-38), சர்வதேச திட்டப் பணிப்பாளர் சீனித்தம்பி பரமேஸ்வரன் (வயது-41), அக்கராயன் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் செல்வராசா நிக்சன் (வயது 37) ஆகியோர் காயமுற்றனர்.

இத்தாக்குதல் பெரியமடுப் பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை

## மலையில் வீழ்ந்த துளிகள்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம்: மார்ச் 28, 29, 30, 31, ஏப்ரல் 01 - 2007
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம்: பிற்பகல் 3.45 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

**பார்வையாளர்களுக்கு .....**

தற்கால சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இம்முறை திருப்பாடுகளின் காட்சிக்கான அனுமதிகள் இலவசமாக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் தமக்கான ஆசனங்களுக்கான இலவச அனுதிச் சிட்டைகளைத் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2393. (அ-50658) - திருமறைக் கலாமன்றம்.

# நினைவஞ்சலி

| 20ஆம் ஆண்டு | 16ஆம் ஆண்டு | 15ஆம் ஆண்டு |
|---|---|---|
| செல்வி ப. இராமநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்) | டாக்டர் சி. வேலாயுதன் (கண் வைத்திய நிபுணர்) | திருமதி ப. வேலாயுதன் |
| தோற்றம்: 24.06.1926 | தோற்றம்:04.10.1925 | தோற்றம்:14.10.1930 |
| மறைவு: 05.04.1987 | மறைவு: 31.10.1991 | மறைவு: 16.06.1992 |
| திதி: 25.03.2007 | | |

நிறைந்த வாசத்துடனும் சிறந்த பண்புடனும் வாழ்ந்தவர்களை
நெஞ்சம் மறப்பதில்லை அது நினைவை இழப்பதில்லை.

126/4, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (58759) சகோதரி.

## விற்பனைக்கு

லான்ட் மாஸ்ரர் (குறுகிய காலம் பாவித்தது), ஜெனரேற்றர் (லீற்றர், 8 ஹோஸ்பவர்) டி-பிறிஜ் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 - 9905269,
021 - 4590484

# EMPLOYMENT OPPORTUNITY

If you are convinced to work in a challenging environment !
You are the right person to join us.

| | |
|---|---|
| * Engineers (Civil) | B.Sc (Eng.) Or equivalent. Experience in building construction is preferred. |
| * Technical Assistants | N.D.T. or N.C.T. with three years experience |
| * Quantity Surveyor | B.Sc. Qty Surveying or equivalent with post qualification experience. |
| * Draughtsman | N.C.T. - Draughtsmanship & Computer skill in AUTOCAD is essential. |
| * Works Supervisor | Minimum two years Construction experience. |
| * Procurement Officer | Knowledge in building construction materials & fluency in three languages with minimum five years work experience. |

Please forward your application with non - related referees to Euroville either by post or hand over at the office.

**Euroville,**
**866, Point Pedro Road, Nallur, Jaffna.**

## நெல்சன் சாரதிப் பயிற்சிப் பாடசாலை

சகல விதமான வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.

நாளை (26.03.2007) முதல் எமது கிளை நிறுவனம்
**இல. 14, பெரியகடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில்**
ஆரம்பிக்கப்படவுள்ளது.

நெல்சன் லேனர்ஸ், இல. 14, பெரிய கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே.இல. 0777 - 942312.

நெல்சன் லேனர்ஸ், இல. 109, Y.M.C.A.கட்டடம், கச்சேரியடி, யாழ்ப்பாணம். (56906)

## தொலைபேசி விற்பனைக்கு

யாழ். நகர எல்லைக்குட்பட்ட ஸ்ரீ லங்கா ரெலிகொம் தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 - 9905269, 021 - 4590484.

## அவசர கலந்துரையாடல்

தற்காலிக நியமனம் கிடைக்கப்பெறாத வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்
இடம்: யாழ். கல்வி வலயம் அருகில்
காலம்: நாளை (26.03.2007) திங்கள்
நேரம்: முற்பகல் 10 மணிக்கு
பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்.

## யா/ மகாஜனக் கல்லூரி – தெல்லிப்பழை
## 2007ஆம் ஆண்டிற்கான அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு எமது கல்லூரி மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களை வருகை தந்து இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்
திருமதி சி. அனந்தசயனன்,
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.
செயலாளர். (59011)

## விற்பனைக்கு

10 அடி டிஸ் அன்ரனா, LNB (American Made) என்பன விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மதியம் 11-12 மணிவரை மட்டும் பார்வையிடலாம். மாறாத விலை 58,000.00 விலையிலோ, பார்வையிடும் நேரத்திலோ மாற்றம் எதுவும் ஏற்படாது. எனவே வீணான அலைச்சல்களைத் தவிர்க்கவும்.
521, நாவலர் வீதி, "அருச்சுனா" (நாவலர் மண்டபம் முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே. 222 6286.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கமலாதேவி சத்தியசீலன் அவர்களின்
அன்புத் தந்தை **கதிர்காமு**
அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/ சோதிவேம்படி வித்தியாசாலை, மானிப்பாய்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மேரி அலெக்ஸ்சாந்திரியா குருநாதன்**
25.03.2007

மண்ணில்: 14 - 10 - 1959
விண்ணில்: 25 - 03 - 2002

அன்புத் தெய்வமே!
அம்மா! பரமன் உலகேகி
ஆண்டுகள் ஐந்தாகியும்
ஆறாததம்மா எம் நெஞ்சம்
எம் அன்பு அம்மாவின் பாசத்தின்
அணைப்பில்லாமல்
நெஞ்சுருகி வாடுகின்றோம் அம்மா!
அம்மாவின் ஆத்மா சாந்திபெற ஆண்டவரிடம்
இறைஞ்சுகின்றோம்.

அரியாலை,
யாழ்ப்பாணம். (58976)
உங்கள் பாசத்தின்
கணவரும், மூன்று முத்துக்களும்.

## சவுதி அரேபியாவில் பிரபலமான அல் - முதாவா நிறுவனத்திற்கு

உடனடியாக செல்வதற்கு
50 விசாக்கள் எம்மிடம் உள்ளன.

## சுத்திகரிப்பாளர்கள்

**றியால் 400 – 550**
(சாதாரண ஆங்கில அறிவு போதுமானது)

வேலைக்கான விதிமுறைகள்
வேலைக் காலம் - 3 வருடங்கள்.
வேலை நேரம் - 8 மணித்தியாலங்கள் + மேலதிக நேரம்.
வாரத்தில் 6 நாட்கள்.

நேர்முகப் பரீட்சை வெளிநாட்டு முகவர்களால் நடத்தப்படும்
திகதிகள் 26, 27, 28, 29, 30, பங்குனி 2007.
14 நாட்களில் அனுப்பிவைக்கப்படும்.

அக்குரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்
53, Orabi pasha mawatha (Technical junction)
Maradana, Colombo - 10
Tel : 0115-375 566/7/8/9 Fax : 0112-441 339
Branch : 253, Negombo Rd, Kurunegala

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 - 11 - 1901 |  | 25 - 03 - 2001 |

**திருமதி பிலிப்பு செல்லம்மா**
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

தகவல்:
பிலிப்பு தருமநாயகம் (மகன்),
43/12, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (59004) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் ரவீந்திரன்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் ரவீந்திரன் 17.03.2007 டென்மார்க்கில் காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகநாதன் - நித்தியலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து தங்கச்சியம்மா, நாகலிங்கம் செல்லம்மா ஆகியோரின் பேரனும் ரஜனி (டென்மார்க்), சாமினி (டென்மார்க்), சாந்தினி (லண்டன்), மனோகரன், ஸ்ரீ கௌரீசன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற குகதாசன் (டென்மார்க்) மற்றும் விஜயகுமார் (டென்மார்க்), கிருபாமூர்த்தி (லண்டன்), கவிதா, தர்சினி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் சௌரிகா, சௌமியா, கீர்த்திகா, ரெஜிகா (டென்மார்க்), குகஜத், சருமியா (லண்டன்) ஆகியோரின் மாமனும் நித்திகா, சண்மிக்கா ஆகியோரின் அருமை பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.03.2007 டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Fyns gade 2/1b
7430 Ikast / DENMARK
T.P.No: 004521412147.

தகவல்:
எஸ். நித்தியலட்சுமி (தாய்),
எஸ். மனோகரன் (சகோதரன்)

## அக்குறா வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம்

**மலேசியாவில் உணவகத்தில்**
**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| உணவக உதவியாளர்கள் | RM 500-700 |
| சமையற்காரர்கள் | RM 700-900 |
| தேனீர், கோப்பி தயாரிப்பாளர்கள் | RM 700-900 |
| ரொட்டி (பறாட்டா) தயாரிப்பவர்கள் | RM 700-900 |

விதிமுறைகளும் நிபந்தனைகளும்

* இரண்டு வருட கால ஒப்பந்தம்
* இலவச உணவு மற்றும் மருத்துவ வசதிகள்
* இலவச மீள் வரவு விமானச் சீட்டு
* அந்நாட்டின் கட்டுப்பாட்டு விதிகளுக்கமைய ஏனைய நிபந்தனைகள்

இருபத்தொரு நாட்களுக்குள் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

வெளிநாட்டு முகவர்களால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் திகதிகள் 26, 27, 28, 29, 30, 31 பங்குனி 2007.

மேலதிக தொடர்புகளுக்கு -

அக்குரா வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம்,
53, Orabi Pasha Mawatha (Technical Junction)
Maradana, Colombo - 10
Tel: 0115-375 566/7/8/9 Fax : 0112-441 339

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



**செல்வன் பழனி பகீரதன் (குட்டி)**
அன்னை மடியில்: 09 - 11 - 1983
இறைவனின் அடியில்: 05 - 04 - 2006
திதி: வளர்பிறை அட்டமி - 25.03.2007

ஈர விழிகளில் கண்ணீர் மல்க
ஓடி மறைந்ததோ ஒருவருடம்
சுழிபுரம் எனும் பெரும்பகுதியில் வாழ்ந்த பகீரதா!
நீ எங்கு ஓடி மறைந்தாய்
பல்கலையும் நன்கு கற்ற, பண்பு மிக்க
பெருமகனாய் 'குட்டி' என அழைக்கப்பட்டாய்
நீ மலேசியா சென்று திரும்புவாய்
என உனது சகோதரர்கள் எதிர்பார்த்தோம்
ஆனால், அது நடைபெறவில்லை
என்றும் ஆறுதலாய் நீ பரலோகத்தில்
அமைதி காண ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (59000)
உன் பிரிவால் துயருறும்
உனது குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே.: 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## பல்கலைக்கழக அனுமதியில் தொடரும் இனப்பாகுபாடு

இலங்கையில் ஈழத் தமிழர்களின் உரிமைக் கான போராட்டம் சுமார் ஆறு தசாப்தகால நீண்ட சரித்திரத்தைக் கொண்டது. தீவின் ஆட்சி அதிகாரம் மேலாண்மைப் போக்குடைய சிங்களப் பெரும் பான்மையினரின் கைகளுக்கு நாற்பதுகளின் கடைசி யில் கைமாறிய சிறிது காலத்திலேயே சிறுபான்மையினரான தமிழரின் உரிமைப்போராட்டமும் ஆரம்பித்துவிட்டது.

மொழியுரிமை, பூர்வீகத் தாயகத்தின் தனித்துவத்தை நிலை நிறுத்தும் சொத்துரிமை, சமய, பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் கலாசார உரிமை, வேலைவாய்ப்புக்கான தொழில் உரிமை என்று சிறுபான்மையினரின் ஒவ்வொரு வரலாற்று உரிமையையும் தென்னிலங்கை பிடுங்கி, அவர்களை அடிமைப்படுத்தும் அடக்குமுறை நடவடிக்கைகளை ஒருபுறம் தீவிரப்படுத்தியது. மறுபுறம் இந்த அடக்கு முறைகளுக்கு எதிரான அறவழி வயப் பட்ட குந்துமறியல், சட்டமறுப்புச் செயற்பாடு போன்ற சாத்வீகப் போராட்டங்களை ஆயுத பலம் கொண்டு பலாத்காரப் பிரயோகம் மூலம் அடக்கும் பேரினவாதத்திமிரும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இவை காரணமாகவும் இவற்றைத் தொடர்ந்து சிறுபான்மையினரான ஈழத்தமிழர்களின் உயர் கல்வி வாய்ப்புக்களின் கதவுகளை இறுக்மூடி அவர்களது கல்வி உரிமையையும் பறிப்பதற்கு தென்னிலங்கைச் சிங்களம் திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுத்ததாலும், வேறு மார்க்கமின்றி தங்களது தாரைவார்க்க முடியாத உரிமைகளை மீள நிலைநாட்டுவதற்காக ஆயுதவழிப் போராட்டத்தை நாடவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்கள் தமிழர்கள்.

'தரப்படுத்தல்' என்ற பெயரில் உயர் கல்வித் துறையில் தமிழர்களின் உரிமைகளையும் வாய்ப்புக்களையும் தட்டிப் பறிக்கத் தென்னிலங்கை திட்டமிட்டுச் செயலாற்றியமையே இனப்பிரச்சினை, பெரும் ஆயுதப் போராகமாறும் வரலாற்றுத் திருப்புமுனைக்கு அடிப்படையாயிற்று என்பது இலங்கையின் பட்டறிவு.

ஆனாலும் யதார்த்தம் தென்னிலங்கைக் குப் புரியவில்லை என்பதேயே இப்போதும் தமிழர் களின் உயர் கல்வி விவகாரத்தில் அது கடைப்பிடித்து வரும் மாற்றாந்தாய் மனப்போக்கு நமக்கு தெளிவுப்படுத்துகின்றது.

இலங்கைத் தீவில் மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புகள் வருடாவருடம் அதிகரித்து வரு கின்றன. ஆனால், இவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழ் மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பு அதிகரிக்கப்படுவது என்பது குதிரைக்கொம்பாகவே இருக்கின்றது என்பதுதான் தமிழ் மாணவர்களுக்கு வேதனை தரும் விடயமாகும்.

முன்னர் 'தரப்படுத்தல்' மூலம் தமிழர்களின் உயர்கல்வி வாய்ப்பைப் பகிரங்கமாகவே சிதறடித்த சிங்களம், இப்போது சத்தம் சந்தடியின்றி, நாசூக்காக அதை முன்னெடுக்கின்றது என விசனம் தெரிவிக்கின்றார்கள் உயர் வகுப்புத் தமிழ மாணவர்கள்.

2006 - 2007 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக உள்ளீர்ப்பின்போது மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பின்படி யாழ். மாவட்டத்திலிருந்து மருத்துவ பீடத்துக்கு 63 இற்கு அதிகமானோரும் பொறியியல் பீடத்திற்கு 64 பேரும் தெரிவு செய்யப்படவேண்டும். ஆனால், மருத்துவ பீடத்துக்கு 49 பேரும் பொறியியல் பீடத்துக்கு 58 பேரும் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. மருத்துவ பீடத்துக்கு மட்டும் சுமார் இருபத்தைந்து வீத அனுமதியை குடாநாடு இழந்திருக்கின்றது.

உயர்கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும் இந்த இனவாத போக்குக்கும் பாகுபாட்டுக்கும் எதிராக நீதிமன்றை நாடுவதற்கு மாணவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். வழமைபோல அங்கும் தமிழர்களுக்கு நீதி மறுக்கப்படுமானால் அவர்களுக்கு வேறு என்னதான் வழி? தமக்கான நிர்வாகத்தைத் தாமே நிறுவுவதைத் தவிர. 1981 இற்கு பின்னர் பெரும்பாலான தமிழர் தாயகப் பகுதியில் வருடாந்த குடிசன மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. நாட்டின் அசாதாரண சூழ்நிலையே அதற்குக் காரணம். இந்த வசதியைத்தான், பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் தமிழர்களை ஒதுக்குவதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகிறது தென்னிலங்கைச் சிங்களம் எனக் குற்றஞ் சுமத்துகின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள்.

கடந்த வியாழனன்று கொழும்பில் உயர் கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் கூட்டம் உயர் கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால தலைமையில் நடைபெற்றபோது இவ்விடயம் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் - குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் - பல்கலைக் கழக அனுமதியில் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டி ருக்கிறார்கள் என்ற உண்மையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அங்கு பகிரங்கப்படுத்தி அரசின் மீது குற்றஞ்சுமத்தினர்.

தமிழர் தாயகத்தில் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை - அண்மைக் காலத்தில் முன்னெடுக்கப்படவில்லை - என்பது உண்மைதான். ஆனாலும் அந்தந்த மாவட்டங்களில் இப்போது வசிக்கும் மக்களின் எண்ணிக்கை தொடர் பாக அரசின் முகவர்களான அரச அதிபர்களே புள்ளி விவரங்களோடு தகவல் தந்திருக்கின்றார்கள். ஆனால் உயர்கல்வி அமைச்சோ அவற்றைப் புறக்கணித்து விட்டு, பதிவாளர் நாயகம் தந்த விவரங்கள் என்ற பெயரில் ஒரு கணக்கை முன்வைத்தது 'கணக்கு விட்டுக்கொண்டு' அதைப் பயன்படுத்தி தமிழர்களின் உயர்கல்வி வாய்ப்பை வெட்டிக் குறைத்து நாசம் பண்ணியிருக்கின்றது எனக் குற்றஞ்சுமத்தியிருக்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

கல்வி விடயத்தில் - குறிப்பாக உயர் கல்வி விவகாரத்தில் - தமிழர்கள் வஞ்சிக்கப்படுவது வெஞ் சினமாகிப் பெரும் விபரீதங்களை விளைவிக்க வல்லது என்பதைத் தென்னிலங்கைக்கு நினைவில் கொள்வது நல்லது.

பல்கலைக்கழக அனுமதியில் மட்டுமல்ல, சட்டக்கல்லூரி போன்ற பிற உயர்கல்வி விடயங்களிலும் தமிழர்கள் திட்டமிட்டு - வசமாக வகுக்கப்பட்ட விதி முறைகளின் கீழ் - நாசூக்காக ஒதுக்கப்படுகின் றார்கள் என்பதை புள்ளிவிவரங்கள் நமக்கு அம்பலப்படுத்துகின்றன.

கல்வியில் தமிழர்களை அமுக்கிவிடும் செயற்போக்கை கைவிடுவது குறித்து கருத்தில் கொள்வது எப்போது?

வினை விதைத்தால் விளைவும் வினை யாகவே இருக்கும். விதைப்பவர்கள் இப்போதாவது இதனைக் கருத்தில் கொள்வது நல்லது.

# தட்டுப்பாடு ஏற்படாதவகையில் கட்டுப்பாடாக நானாவிதப் பொருள்களை விநியோகிக்கலாம்

## கூ.சங்கங்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.மாவட்டத்திலுள்ள பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களில் நானாவிதப் பொருள்களைத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் கட்டுப்பாடான முறையில் விநியோகத்தை மேற்கொள்ளலாம் என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இதுவரை காலமும் நானாவிதப் பொருள்கள் பங்கீட்டு அடிப் படையிலேயே விநியோகிக்கப் பட்டு வந்தன. தற்போது ஓரளவு பொருள்கள் கையிருப்பில் உள்ளன. எனவே நடை முறையில் இருந்த பங்கீட்டு அடிப் படையிலான விநியோகத் துக்குப் பதிலாக கட்டுப்பாடான விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும். பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் இந்த விநியோகம் இடம்பெற வேண்டும் என்று அரச அதிபர் மேலும் கேட்டுள்ளார். கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமது பிரதே செயலர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களின் ஆலோசனைக்கமைய நானாவிதப் பொருள்களின் விநியோகத்தை மேற் கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (அ-17-29)

# இலங்கை - இந்திய கூட்டு ரோந்துக்கு இணங்கக்கூடாது என்கிறார் ஜெயலலிதா

சென்னை, மார்ச்.25

இலங்கை - இந்திய கடற்பரப்பில் இரு நாட்டுக் கடற்படைகளும் கூட்டுரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவது ஆபத்தானது. எனவே இந் நடவடிக்கைக்கு இந்தியா இணங்கக் கூடாது. இவ்வாறு அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

சென்னையிலுள்ள அ.தி.மு.க அலுவலகத்துக்கு கடந்த வியாழக்கிழமை சென்றிருந்த போது ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டு ரோந்து குறித்த இலங்கையின் யோசனைக்கு இந்தியா ஒருபோதும் சம்மதிக்கவே கூடாது. இலங்கையில் நிலவும் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தன்னை ஒரு போதும் ஈடுபடுத்திக் கொள்ளவே கூடாது.

இப்பிரச்சினைக்கு கூட்டு ரோந்து மேற்கொள்வது தீர்வாக அமையாது தேவைப்பட்டால் இந்தியக் கடற்படையை அதிக அளவில் இங்கு பணியில் ஈடுபடுத்தி இந்தியக் கடல் எல்லையையும் இந்திய மீனவர்களையும் காப்பாற்றலாம் என்கிறார்.

கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து கூட்டு ரோந்து நடவடிக்கை குறித்து பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சிறுவர் பாடல் இறுவட்டு இன்று வெளியிடப்படும்

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம்,4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள செயற்பாட்டு மையத்தின் மண்டபத்தில் 'சிட்டான் குருவிகள்' என்னும் சிறுவர் பாடல் இறுவட்டு வெளியிட்டு வைக்கப் படவுள்ளது. (202)

### வணிகபீட புகுமுக மாணவர் விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ, வணிகபீடத்துக்கு 2006/2007 கல்வியாண்டிற்குத் தெரிவான புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் என பீடாதிபதி க.தேவராஜா தெரிவித்தார். (202-79)

### கலந்துரையாடல்

குடாநாட்டில் தற்காலிக இணைப்புக் கிடைக்காத வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.வலயத்திற்கு அருகில் இடம்பெறவுள்ளது. (1-203)

### நல்லைக்குரு முதல்வர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 25

நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமுதல்வர் நல்லைக் குரு மணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 27ஆவது ஆண்டுக் குருபூசை நாளை திங்கட் கிழமை குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு யாக பூசை, அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு கோ பூசையும் இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு குரு முதல்வரின் திருவுருவப் பட ஊர்வலம் நடைபெறும்.

### தமிழ் குறுந்திரைப்படத்துக்கு முதற்பரிசு கிடைத்தது

கொழும்பு,மார்ச் 2[illegible]

பிரெஞ்சு மொழியைப் பிரத[illegible]னமாகக் கொண்ட ஐ[illegible]நாடுகள் இணைந்து இலங்கையில் நடத்திய குறுந்திரைப்பட விழாவில் தமிழ் திரைப்படம் ஒன்று முதன் முறையாக முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காசிநாதர் ஞானதாஸ் இயக்கிய ''அழுத்தம்'' (UNDER PRESSURE) என்ற திரைப்படமே மிகச் சிறந்த குறுந்திரைப்படமாகத் தெரிவாகி முதற் பரிசைப் பெற்றது.

இத்திரைப்பட விழாவில் இலங்கையைச் சேர்ந்த 68 குறுந் திரைப்படங்கள் காட்சிப்படுத் தப்பட்டன.

முதல் பத்து இடங்களுக்குள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கௌதமன் கருணாநிதி இயக்கிய ''செருப்பு'' (THE SILIPPER) என்ற தமிழ் திரைப்படமும் ஒன்றாகும். (அ-203)

# மரக்கறிகளின் விலைகள் அடிமட்டத்தில் — எமது நிலை குறித்துச் சிந்திப்பார் எவருமில்லையா?

## மக்கள் மடல்

யாழ்ப்பாணத்தில் இம்முறை மரக்கறிவகைகளின் விலைகள் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளன. அதன் காரணமாக விவசாயிகளாகிய நாம் பொருளாதார ரீதியில் பெரும்பாதிப்பை எதிர்நோக்கியுள்ளோம்.

எமது இந்த நிலை குறித்து இதுவரை எவரும் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது எமக்கு மிகுந்த வேதனையளிக்கிறது.

விலை வீழ்ச்சியினால் மரக்கறிச் செய்கைக்காக செலவிட்ட பணத்தைக் கூடப் பெறமுடியாத நிலையில் விவசாயிகளாகிய நாம் தவிக்க நேர்ந்துள்ளது.

இம்முறை நாம் ஓர் இக்கட்டான சூழ்நிலையிலேயே மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டோம். பசளைகளுக்கான தட்டுப்பாடு, எரிபொருள்களின் விலையேற்றம், அதிகரித்த கூலி எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மனம் தளராமல் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டோம். ஆனால் அவற்றுக்குச் செலவு செய்த பணத்தைக் கூட மரக்கறிகளின் விற்பனையால் பெற முடியவில்லை.

அதனால் மனச்சோர்வுடன் நாள்களைக் கழிக்கின்றோம்.

கத்தரிக்காய், வெண்டி, பயிற்றை, தக்காளி, கோவா, பீற்றூட், கரட் போன்ற மரக்கறிகள் ஒரு கிலோ 5 ரூபாவுக்கு உட்பட்ட விலையிலேயே வியாபாரிகளுக்கு வழங்குகின்றோம். அத்துடன் பெருமளவான வெங்காயம் சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகளிடம் தேங்கிக்கிடக்கின்றது. குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகியுள்ள எமக்கு இது மேலும் பெரும் பொருளாதாரப் பின்னடைவைத் தந்துள்ளது. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்ற வாக்கிற்கு ஏற்ப காலம் எம்மைச் சோதித்துள்ளது; வாட்டுகிறது.

ஏனைய விளைபொருள் உற்பத்தித் துறைகளில் ஈடுபடாமல் இந்த வருடம் விவசாயிகளில் மிகப் பலரும் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டதால் எப்போதும் இல்லாதவாறு மரக்கறிகளின் விலைகள் மிகவும் அடிமட்டத்துக்கு வந்துள்ளன. ஏனைய விளைபொருள்களின் உற்பத்திக்கான பசளை வகைகள், கிருமிநாசனிகள் உரிய காலத்தில் வேண்டிய அளவில் கிடைக்காததே அதற்குக் காரணம். இந்த நிலை உருவானதற்கு திடீரென கடந்த ஓகஸ்ட் மாதத்தில் தோற்றுவிக்கப்பட்ட அசாதாரண சூழ்நிலை முழுமுதற்காரணம்.

மக்களுக்கு உணவு போடுவதற்காக பாடுபடும் விவசாயியின் வயிறு இப்போது பற்றி எரிகிறது. அந்த விவசாயிகள் பசியைத் தீர்ப்பதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் இங்கு மேற்கொள்ளப்பட்ட தாகத் தெரியவில்லை.

காலநேரம் பாராது, பசி நோக்காது தோட்டத்திலேயே தனது வாழ்வைச் செலவிடும் விவசாயிகளின் நிலை பற்றி எவரும் சிந்திக்காமல் இருப்பது ஏன்?

கிருமிநாசனிகளுக்கும், உரத் துக்கும் [illegible] தட்டுப் பாடு நிலவுகிறது. இவற்றை விவசாயிகளாகிய நாம் தேவையான நேரத்தில் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. இவ்வாறிருக்கையில் மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளதால் நாம் தொடர்ந்தும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தேவையான பொருளாதார வசதி இல்லாமல், பெரும் நெருக்கடி மிகுந்த கஷ்ட நிலைமை ஒன்றை எதிர்நோக்கியுள்ளோம்.

விவசாயிகள் பாதிக்கப்படும்போது அதற்குரிய நஷ்ட ஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இல்லை. விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டங்களும் பெரிதாகச் செயற்படுத்தப்படுவதில்லை.

இந்நிலையில், பாதிக்கப்படும் விவசாயி மீண்டும் தன்னை சுதாகரித்துக் கொள்வது எப்படி?

கடந்த காலங்களில் சாதாரண வேளைகளில், வேறு தொழில் துறைகளில் முன்னேறக் கூடிய சாத்தியங்கள் இருந்தும், அவற்றை நாடாமல் தொடர்ந்தும் விவசாயத்தையே தமது வருவாய் ஈட்டும் பிரதான தொழிலாக செய்த விவசாயிகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை; உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பன நீர் மேல் எழுத்துக்களாக மறைந்துவிட்டன.

மரக்கறி மட்டுமல்லாமல், இம்முறை வெங்காயம், திராட்சை ஆகிய பயிர்களை உற்பத்தி செய்த விவசாயிகளும் சந்தை வாய்ப்பு இல்லாமல் சோர்ந்து போய்விட்டனர்.

விவசாயிகளாகிய எமது இந்தப் பிரச்சினை தொடர்பாக சிந்திக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. ஆனாலும் ஒருவரும் அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை; சிந்திப்பதாக அசுகை தானும் இல்லை.

ஆகவே, நாம் கேட்டுக்கொள்வது என்னவெனில், விவசாயிகளாகிய நாம் பதிக்கப்படும்போது அந்தப் பாதிப்பில் இருந்து மீள்வதற்குரிய திட்டங்கள் இங்கு அமுல்படுத்தப்படவேண்டும்.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்கள் உடனடியாக இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பாதிப்புக்குள்ளாகும் விவசாயிக்கு நஷ்ட ஈடு வழங்குவது, அல்லது விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது பொருளாதாரத்தைப் பாதுகாக்க உதவுங்கள்.

பிரதான வீதி மூடப்பட்டதால் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு மக்கள் வரிசைகட்ட நேர்ந்த சூழ்நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான உள்ளீடுகளைக் குறைந்த அளவில் பெறுவது என்பது பெரும் கஷ்டமாக இருந்தது.

இறுதியில், விவசாயிகளாகிய எமது தலைகளிலேயே பாறாங்கல் தூக்கிப் போடப்பட்டிருக்கிறது.

"மண்கிண்டி மன்னன்"

## நாளை

பங்குனி - 12
திங்கட்கிழமை
26.03.2007
திதி: அட்டமி
பிற்பகல் : 05.19
நட்சத்திரம்: திருவாதிரை
முன்னிரவு : 09.43
சுபநேரம் : 12.15 - 01.45
ராகுகாலம் : 07.45 - 09.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பையை ஆஸி. தக்கவைக்குமா?



[illegible] நான்கு ஆண்டுகளுக்குக் கிரிக்கெட் உலகை ஆளப்போவது யார்? இந்தக் கேள்விக்கான பதிலைத்தான் கிரிக்கெட் ரசிகர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலியாவின் உலகக் கோப்பை ஆதிக்கம் தொடருமா? அல்லது புதிய அணி ஒன்றிடம் கோப்பை கைமாறுமா? என்ற எதிர்பார்ப்புடன் கிரிக்கெட் உலகம் விழித்திருக்கிறது.

இவற்றுக்கு மத்தியில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் கோலாகலமாக ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பலம்வாய்ந்த அணியான பாகிஸ்தான் அணியின் வெளியேற்றம், அதன் பயிற்சியாளர் பாப் வூல்மரின் மரணம் ஆகிய அதிர்ச்சியான சம்பவங்களுடன் இம்முறை உலகக் கிண்ணப்



போட்டி ஆரம்பமாகியுள்ளது.

16 நாடுகள் நான்கு பிரிவுகளாக இந்தப் போட்டியில் பங்கேற்கின்றன.

முதற்சுற்றுப்போட்டிகள் அனைத்தும் இன்று நடைபெறும் பங்களாதேஷ் - பேர்முடா அணிகளுக்கிடையிலான ஆட்டத்துடன் முடிவடைகின்றன.

முதற்சுற்றில் சிறப்பாகப் பிரகாசித்ததன் மூலம் 'ஏ' பிரிவில் ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளும், 'பி' பிரிவில்

## பலம்வாய்ந்த அணிகள் வெளியில்

இலங்கை அணியும், 'சி' பிரிவில் நியூஸிலாந்து அணியும் 'டி' பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அயர்லாந்து அணிகளும் 'சுப்பர் - 8' சுற்றுக்கான தமது வாய்ப்பை உறுதிப்படுத்தியுள்ளன.

'பி' பிரிவில் இன்று நடைபெறவுள்ள பங்களாதேஷ் - பேர்முடா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றால் இந்திய அணியின் உலகக்கிண்ணக்கனவு கலைந்து போக, பங்களாதேஷ் அணி 'சுப்பர் - 8' சுற்றுக்குச் செல்லும். பங்களாதேஷ் இதில் தோல்வியடைந்தால் இந்திய அணிக்கு 'சுப்பர் - 8' செல்ல வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும் இந்த ஆட்டத்தில் பங்களாதேஷ் வெல்லும் என்ற நம்பிக்கை கிரிக்கெட் ரசிகர்களிடையே காணப்படுகின்றது.



அதேபோன்று 'சி' பிரிவில் கென்யா அணியுடனான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றால் அது 'சுப்பர்-8' சுற்றுக்குத் தெரிவாகும். தோல்வியடைந்தால் கென்யா அணிக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் இம்முறை மிகவும் எதிர்பார்க்கப்பட்ட - பலம் மிக்கதாகக் கருதப்பட்ட அனுபவ அணியான பாகிஸ்தான் அணி அறிமுக அணியான அயர்லாந்திடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்ததன் மூலம் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியது. அந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் உலகில் - பயிற்சியாளர் வரிசையில் மிகவும் மரியாதைக்குரியவராகவும் விற்பன்னராகவும் மதிக்கப்பட்டவர் பொப் வூல்மர். இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான இந்த மனிதரின் பிரிவு கிரிக்கெட் உலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜமெய்க்கா பொலிஸார், அவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தமது ஆரம்ப விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தான் அணியின் வீரர்களிடமும் இந்த விசாரணை தொடர்கிறது.

இவற்றுக்கு மத்தியில் 'சுப்பர் - 8' சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றன.

தொடர்ந்து இரண்டு தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்று கிரிக்கெட் உலகின் நாயகர்களாக விளங்கும் ஆஸ்திரேலிய அணியினர் இம்முறையும் கிண்ணத்தை வென்று 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தி விடவேண்டும் என்ற எண்ணத்தில் அபாரமாக ஆடிவருகின்றனர்.

'சுப்பர்-8' சுற்றுக்கு ஏற்கனவே தெரிவாகியுள்ள அணிகளில் ஆஸ்திரேலியா, இலங்கை, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் முன்னர் நடந்த முதற்சுற்று ஆட்டங்களில் தமது திறமைகளை அபாரமாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட அணிகள் அனைத்தும் மிகப்பலமான நிலையில் உள்ளதால் 'சுப்பர்-8' சுற்று ஆட்டங்கள் விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் நிறைந்தவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'கறுப்புக் குதிரைகள்' என வர்ணிக்கப்படும் நியூஸிலாந்து அணி அண்மையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று ஒருநாள் போட்டிகளையும் அப்படியே அள்ளியது. இந்த உலகக் கிண்ணத் தொடரிலும் யாரையாவது போட்டுத்தள்ளவேண்டும் என அது காத்திருக்கிறது.

1996ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்ற இலங்கை அணி இம்முறை ஆஸ்திரேலியாவி

**அதிரன்**

டம் இருந்து கிண்ணத்தைப் பிடுங்கிவிடவேண்டும் எனக் கங்கணம் கட்டியுள்ளது. இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கையின் திறமை வெளிக்காட்டப்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்களும் முன்னர் இடம்பெற்றஆட்டங்களில் எழுச்சி கொண்டுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் 'சுப்பர் - 8' சுற்றுக்குத் தெரிவாகியுள்ள அணிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை நிரூபிப்பதற்குக் கடுமையாகப் போராடவேண்டியிருக்கும்.

அந்த விறுவிறுப்பான காட்சிகளைக் காண்பதற்கு ரசிகர்களும் ஆவலாக உள்ளார்கள். கிண்ணம் யாருக்கு? பொறுத்திருந்து பார்ப்போம். ★

# பத்திரிகை அச்சிடும் தாளுக்கு வடக்கில் தட்டுப்பாடு ஏன்?

## 'லங்காதீப' ஆசிரியர் தலையங்கம்

மொழிச் சுதந்திரம் மற்றும் வெளியீட்டுச் சுதந்திரம் உட்பட்ட கருத்து வெளியிடும் சுதந்திரம் இந்நாட்டின் சகல குடிமக்களுக்குமான- இலங்கையின் அரசமைப்புச் சட்ட விதிகளுக்கமைய மீறப்பட இயலாத வகையில் அமையும் உறுதிப்படுத்தப்பட்டதொரு - அடிப்படை மனித உரிமையாகும். வெளியீட்டுத் துறையைப் பொறுத்தவரை செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஏனெனில் செய்திப் பத்திரிகை என்பது ஒரு நாட்டின் பொதுமக்களுடன் அன்னியோன்யமாக ஒன்றறக் கலந்துபோயுள்ள தொடர்பு சாதனம் என்பதனால் ஆகும். சட்டபூர்வமாகவும் அங்கீகரிக்கப்பட்ட வரைமுறை விதிகளுக்கு அமையவும் ஒரு செய்திப் பத்திரிகை செயற்படுமானால், அது அவ்விதம் செயற்படும் காலம் வரையும் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் மற்றும் வேறெந்த வகையிலுமான தடை எதனையும் அப்பத்திரிகைக்கு எதிராக மேற்கொள்ளும் உரிமை எவருக்கும் கிடையாது. எந்தவொரு மொழி வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட வகையிலேயே, மொழிச் சுதந்திரம் மற்றும் வெளியீட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், பத்திரிகைஒன்றை வெளியிடும் மொழி, மேற்குறித்த உரிமைக்கு எந்த வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் விவகாரமொன்றல்ல.

ஆனால் 'உதயன்' செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் எம்.வி.கானமயில்நாதன் தெரிவித்துள்ளதாகக் கூறப்படும் தகவல்களுக்கமைய யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் செய்திப் பத்திரிகைகளின் குரல்வளை நசுக்கப்படும் அளவுக்கு நிலைமை உக்கிரமடைந்துள்ளதாகவே கருத முடிகிறது. பத்திரிகை அச்சிடும் தாளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு மேலதிகமாக யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமை, இனம் தெரியாத நபர்கள் உதயன் பத்திரிகை அலுவலகத்துள் அத்துமீறிப் பிரவேசித்து பத்திரிகை அலுவலக ஊழியர்களை படுகொலை செய்தமை, அங்கிருந்த இயந்திர சாதனங்களைச் சேதப்படுத்தியமை, பத்திரிகை அச்சுத்தாள் களஞ்சியங்களைத் தீயிட்டு நாசப்படுத்தியமை மற்றும் பத்திரிகை விநியோகஸ்தர்களைப் படுகொலை செய்தமை போன்ற சம்பவங்கள் காரணமாக நாட்டின் வட பகுதியின் சுதந்திரமான குரல் சில தினங்களில் முற்றாக செயலிழக்க நேருமென கானமயில்நாதன் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதயன் பத்திரிகைக்கு ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இத் தலைவிதி குறித்து யாழ். மாவட்ட அரச அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், திறைசேரிப் பிரதிச் செயலாளரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் ஆகியவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பத்திரிகை அச்சிடும் தாளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், உக்கிரமடைந்துள்ள இத்தகைய நிலைப்பாடு காரணமாக நாளாந்தம் அச்சிடும் பத்திரிகை பிரதிகளின் எண்ணிக்கையை ஐயாயிரம் என்ற சிறிய தொகையாக மட்டுப்படுத்த வேண்டி இருந்ததாகவும் உதயன் பத்திரிகை ஆசிரியர் கூறியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செய்தி வெளியிடும் உரிமை அரசமைப்பின்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நாடொன்றில், உதயன் செய்திப் பத்திரிகைக்கு ஏற்பட்டுள்ள இத்தகைய கவலைக்குரிய தலைவிதி அரசின் விசேட கவனத்துக்கு உடனடியாக உள்ளாக வேண்டியதொன்றாகும். நாட்டின் ஏனைய பத்திரிகைகளுக்கு ஏற்படாத பத்திரிகை அச்சிடும் தாளுக்கான தட்டுப்பாடு, உதயன் செய்திப் பத்திரிகைக்கு மட்டும் எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்பதும், அது உதயன் செய்திப் பத்திரிகையில் வெளியிடப்படும் கருத்துக்களை ஜீரணிக்க இயலாத தரப்பினரின் சதி முயற்சியா என்பதும் கேள்விக்குரியதே. அது அவ்வாறானால், அதற்கு பொறுப்பேற்க வேண்டியோர் எவரென்பதை கண்டறிந்து அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விசேட பொறுப்பு ஊடகத்துறை அமைச்சரினதும் நாட்டை நிர்வகிக்கும் அரசினதும் கடப்பாடாகும். நாட்டின் தமிழ் மக்களது கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உதயன் போன்றதொரு பத்திரிகைக்கு இத்தகைய தலைவிதி ஏற்படுவது தமிழ் மக்களது கருத்து வெளிப்பாடுகளை நசுக்கிவிடும் நடவடிக்கையா என்றதொரு தவறான கண்ணோட்டமும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் உருவாகுமானால் கூட, அதுவும் ஆளும் தரப்பின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துமொன்றாகவே அமையும்.

பலதரப்பட்ட சட்ட திட்டங்கள், தடைகள் மற்றும் வரையறை, கட்டுப்பாடுகள் பொதுவாக சகல பத்திரிகைகளுக்கும் அழுத்தங்களை ஏற்படுத்திய சந்தர்ப்பங்களில், அந்தந்தக் காலங்களில் நாட்டை நிர்வகித்த அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் இங்கு ஞாபகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

பத்திரிகை அச்சிடும் தாள் தொடர்பாக நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த 'கோட்டா' [illegible] ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் நிர்வாக வேளையில் முற்றுமுழுதாக நீக்கப்பட்டதன் காரணமாக செய்திப் பத்திரிகைகளுக்கு பெரும் நிவாரணம் கிட்டியது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த வேளையில் குற்றவியல் தண்டனைச் சட்டத்தை நீக்கிக் கொண்டதன் மூலம் பத்திரிகைகளுக்குக் கிட்டிய வசதி வாய்ப்புக்கள் விசாலமானவை எனவும் குறிப்பிட முடியும். அதனைத் தொடர்ந்து செய்திகளைத் தெரிந்து கொள்வது தொடர்பான ஊடகச் சட்டம் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படுவதை முன்னெடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவில் பிரதமரின் பிரதிநிதியொருவர், பத்திரிகை ஆசிரியர்களது ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் மற்றும் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பிரதிநிதி யொருவரும் அடங்கியிருந்தனர். அக் குழுவின் சிபார்சுகள் அடங்கிய அறிக்கை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அது நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் கரணமாக அக் குழுவின் அச்சிபார்சுகள் செயலற்றுப் போயின. அது மட்டுமன்றி நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பான சட்ட விதிகளை ஆராய்வது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கா வால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராக அந்த வேளையில் எதிர்க்கட்சியிலிருந்த லக்ஸ்மன் கதிர்காமர்நியமிக்கப்பட்டிருந்தார். அக்குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் கூட அவை அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட நேர்ந்தால் செயலிழந்து போக நேர்ந்தது.

அவ்விதம் செயலிழந்துபோன அக்குழுக்களின் சிபார்சுகள் மீண்டும் இன்றுவரை முன்வைக்கப்படாமையால் அவை சம்பந்தப்பட்ட சட்ட விதிகளின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்நாட்டின் சகல பத்திரிகைகள் தொடர்பாகவும் அத்தகையதொரு நிலை நிலவும் நிலையில் தமிழ் மொழி மூலம் யாழ்ப் பாணத்திலிருந்து வெளியிடப்படும் உதயன் பத்திரிகைக்கு ஏற்பட்டுள்ளதாக அதன் ஆசிரியர் வெளியிட்டுள்ள கருத்து பத்திரி கைச் சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கும் எவரொருவரதும் சிந்தையில் உறைக்க வேண்டியதொரு விடயமேயாகும். அப் பத்திரிகையில் தமிழ் மக்கள் சார்பாக வெளியிடப்படும் கருத்துக்களை பொறுத்துக்கொள்ளாத தரப்பொன்றும் இருப்பதை அப் பத்திரிகை ஆசிரியரின் கருத்து வெளிப்பாடு மூலம் புரிந்து கொள்ளமுடிகிறது.

செய்திகளைவெளியிடுவது தொடர்பாகசகல பத்திரிகைகளுக்கும் ஒரே விதமான உரிமைகளே உள்ளன. அவ்விதமிருக்கையில் தமிழ் மொழி மூலம் வெளியிடப்படும் ஒரு பத்திரிகைக்கு மட்டும் பத்திரிகை அச்சுத் தாளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுத்துவதன் மூலமோ, மரண அச்சுறுத்தல் மேற்கொள் வதன் மூலமோ தடை ஏற்படுமானால் அது இந்நாட்டில் நிலவும் ஜனநாயகத்துக்கும் அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரகடனத்தின் சுதந்திரத்துக்கும் கடும் அச்சுறுத்தல் எனக் கொள்ளப்பட வேண்டியதாகும். இன்று உதயன் பத்திரிகைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள முட்டுக்கட்டை நாளை பிறிதொரு பத்திரிகைக்கும் ஏற்படுத்தப்படலாம். ஆதலால் இந்த விடயம் நாட்டின் நிர்வாகத் தரப்பின் உடனடிக் கவனிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது. ★

- தமிழில்: ராஜா

## பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியத்திடம் உதவி கோருகின்றார் உதயன் ஆசிரியர்

செய்திப் பத்திரிகைகள் அச்சிடும் தாளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணத்தில் செய்திப் பத்திரிகைகளின் குரல்வளை நசுக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணத்தில் செய்திப் பத்திரிகைகள் முகம் கொடுக்க நேர்ந்துள்ள இத் தலைவிதி குறித்து செய்திப் பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியம் கவனம் செலுத்தவில்லை எனவும் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் எம்.வி.கானமயில்நாதன் பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியத்தின் தலைவருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்திப் பத்திரிகை ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், உதயன் செய்திப் பத்திரிகை அலுவலகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து அலுவலக ஊழியர்களைப் படுகொலை செய்தும் அங்கிருந்த இயந்திர சாதனங்களை நாசப்படுத்தியுள்ளதாகவும், அச்சுத்தாள் களஞ்சியத்துக்குத் தீயிட்டும், பத்திரிகை விநியோகஸ்தர்களைப் படுகொலை செய்த சம்பவங்கள் தொடர்பாகவும் அவர் தமது அக்கடிதத்தில் விபரித்துள்ளார்.

பத்திரிகை அச்சுத்தாளுக்கு ஏற்பட்டிருக்கும் இத் தட்டுப்பாடு காரணமாக வடபகுதியின் சுதந்திரமான குரல் இன்னமும் சில தினங்களில் முற்றாகச் செயலிழக்க நேருமெனவும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமை தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் அச்சுத்தாள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 25 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்ட தமது பத்திரிகையை 5 ஆயிரம் பிரதிகளாக மட்டுப்படுத்தவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும், இப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாவிட்டால் குறுகிய காலத்துள் பத்திரிகை அச்சிடுதலை நிறுத்தவேண்டி ஏற்படுமெனவும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய நிலையொன்று கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளுக்கு ஏற்படுமானால் பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியம் அதற்கெதிராகச் சந்தேகமில்லாது கிளர்ந்தெழும் எனவும், ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலை குறித்து பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியம் எதுவித அக்கறையும் எடுத்துக்கொள்ளவில்லை எனவும் உதயன் ஆசிரியர் தமது கடிதத்தில் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியத்துக்கு இன்னமும் போதிய கால அவகாசம் இருப்பதாகவும் தெரிவித்துள்ள உதயன் பத்திரிகையின் ஆசிரியர், இத்தகைய சிரமமான வேளையில் உரிய உதவி வழங்குமாறு பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியத்திடம் கேட்டுக்கொள்வதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'லங்காதீப' சிங்கள நாளிதழின் செய்தி (20.03.2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### நாராயணபிள்ளை சின்னராசா

திருநெல்வேலி, அரசடி அம்மன் வீதியைச் சேர்ந்த நாராயண பிள்ளை சின்னராசா நேற்றுமுன்தினம் (23.03.2007) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் அன்று நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருநெல்லேவி* — *தகவல்: மனைவி, பிள்ளைகள்.*

### தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம்



தாளையடி லேன், திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம் (ஓய்வு பெற்ற மதுவரி பரிசோதகர், மதுவரித் திணைக் களம்) 20.03.2007 செவ்வாய்க்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நீலாயதாட்சி (கண்ணுஅக்கா) தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற திருமதி ஜெயலக்ஷ்மி ஜெயரட்ணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி ஜெயந்தி பாலசுப்பிரமணியம் (ஆசிரியை, யா/முத்துத்தம்பி ம.வி., திருநெல்வேலி), ஜெ.ஜெயகணேஸ் (பாபு - கணக்காளர், R.D.D, திருகோணமலை), ஜெ.ஜெயரமேஸ் (சூரி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும் செல்வி கஜேந்தினி, நேரு (ஹேமா) அவர்களின் வளர்ப்புத் தந்தையும், ரி.பாலசுப்பிரமணியம் (சிறுவர் பாதுகாப்பு நிதியம், யாழ்ப்பாணம்), திருமதி விஜயா ஜெயகணேஸ் (ஆசிரியை), திருமதி வாசுகி ஜெயரமேஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற ஜெயசிங்கம் (மஸ்கன்ஸ்), ஜெகநாதன் (பொலிஸ் உத்தியோகத்தர்), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி நாகேஸ்வரி ஜெயசிங்கம், காலஞ்சென்ற திருமதி ராஜராஜேஸ்வரி, ஜெயநாதன், திருமதி செவ்வந்தி ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பா.ஆரணியா, பா.ஜீவிதா, பா.ஜெயசீலன், ஜெ.அருண்ராம், ஜெ.ஆதிக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2007) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தாளையடி லேன், திருநெல்வேலி.* — *தகவல்: திருமதி ஜெயந்தி பாலசுப்பிரமணியம் (மகள்).*

### சிதம்பரி சதாசிவம் (துரை)

*(உரிமையாளர், மின்மினி கடை, அச்சுவேலி)*



கொடிகாமம், அல்லாரையைப் பிறப்பிட மாகவும் அச்சுவேலி, மடத்தடியை வசிப்பிட மாகவும் கொண்ட சிதம்பரி சதாசிவம் 22.03.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் வனேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுசியா, சுபர்ணா, சஞ்சீவன், பிரியந்தி, லோஜனா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு, மடத்தடி.* — *தகவல்: வனேஸ்வரி (மனைவி)*

### குமாரசாமி சரவணபவன்

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சரவணபவன் 22.03.2007 அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சசிக்குமார், ஜீவா (பிரான்ஸ்), சறோஜா, சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் குமுதாதேவி, உதயசூரியன் (தயா-பிரான்ஸ்), ஞானரூவன் (ஞானி - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் ஆரணி (பிரான்ஸ்), ஆருயன் (பிரான்ஸ்), தர்சிகா (பிரான்ஸ்), குகராச், துவாரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.03.2007) சனிக் கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கானை.* — *தகவல்: தாய், சகோதரர்கள், பிள்ளைகள்.*

### முத்துக்குமாரு சந்திரசேகரன் (சந்திரன்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சந்திரசேகரன் (சந்திரன்) பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் இணுவில் கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற நன்னித்தம்பி மற்றும் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் வாசுகியின் (பேபி) அன்புக் கணவரும் மங்களகௌரி, குணசேகரன், ஜெயகௌரி, பத்மகௌரி, சிவசேகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2007) திங்கட் கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி: ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.* — *தகவல்: குடும்பத்தினர்.*

### ஆஸ்பத்திரி வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டவை

யாழ்ப்பாணம், மார்ச்25

யாழ். ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் தவறவிடப்பட்டு கண்டெடுக்கப்பட்ட சில பொருள்கள் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கண்டெடுத்த பொருள்களின் விவரம் வருமாறு:-

சிமியோன் கமலதாசனின் கைப்பை, பின் வருவோரின தும் அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. யோகராசா யுவனிதா (ஆனைக்கோட்டை), தவமணி மார்க்கண்டு (அராலி மேற்கு), நாகமணி நல்லம்மா(ஈச்சமோட்டை), கமலக்கண்ணி கந்தசாமி (வட்டுக்கோட்டை), அன்ரனி பெர்ணான்டோ செல்வராஜேஸ் (மண்டைதீவு), சிவலிங்கம் இரத்தினேஸ்வரி(நல்லூர்), சந்திரராசா சரஸ்வதி (புளியங்கூடல்), வசந்தலிங்கம் தர்மராணி(மூளாய்), சந்திராதேவி கிறிஸ்துராசா (பெரியவிளான்), சுப்பிரமணியம் சிவபாக்கியம் (தொல்புரம் மேற்கு), மலர் பாஸ்கரன்(புத்தூர்), தர்மநாயகம் வரலட்சுமி(நல்லூர்).

(அ-1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1918 - 01 - 01 | 2007 - 02 - 23 |



### வேலுப்பிள்ளை சின்னையா

மண்டைதீவு (கொக்குவில் கிழக்கு)

**அறிவுடனே அன்பு தந்து**  
**அகிலமதை நாம் காண**  
**பாசமுடன் எம்மை வளர்த்த**  
**அன்புத் தெய்வமே**  
**ஆலிழந்த விழுதுகளாய்**  
**அழுது புலம்புகின்றோம்**  
**மீண்டும் உன் முகம் காணவே!**

இன்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி: 41/4, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.* — **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**


### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்பு சதுரக் காணி விற்பனைக்குண்டு. தரகர் இன்றி நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

**தொ.பே. 0779234176**

### கார் விற்பனைக்கு

டாக்டரின் தனிப்பாவனையில் உள்ள KIA SPECTRA WP - JB - xxxx SILVER Colour கார் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0773620988, 0776162345

### உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள 37- xxxx தொடரிலக்கமுடைய மசிபேக்குஸன் - 240 ரக உழவு இயந்திரம் பெட்டியும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777061483

### வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

சூராவத்தை, சுன்னாகத்தில் புனித திரேசம்மா ஆலயத்திற்கு அருகில், கிழக்குப் பக்கமாகவுள்ள வசதிகளைக் கொண்ட சிறிய வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய

தொ.பே. இல. : 0776032317, 0773618968

### விற்பனைக்கு

அலுவலக உபயோகத்திற்கு / வைத்திய சாலை உபயோகத்திற்கு / வீட்டுப் பாவனைக்கு பயன்படக்கூடிய மேசைகள், கதிரைகள், இரும்புக் கட்டில்கள் / மெத்தைகள் / மின் விசிறிகள் மற்றும் வைத்தியசாலை உபகரணங்கள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 021 222 9813, 0773169463

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ A\L வரை கல்வி கற்ற விவாகரத்துப் பெற்ற 43 வயது, வியாபாரத் துறையில் போதிய வருமானம், சொத்துக்கள் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. கணவரை இழந்தவர், விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பப்படுவர். சீதனம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
விளம்பர இலக்கம்: 2957,
[illegible] உதயன், யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றும் **திருமதி ர.கண்மணி** அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை கதிர்காமு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும், நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வேலணை.*

## மரண அறிவித்தல்கள்

### கதிர்காமு நடராசா

நுணாவில் மேற்கைச் சேர்ந்த கதிர்காமு நடராசா நேற்று (24.03.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகராசா, பரமேஸ்வரன் (அஞ்சல் அலுவலகம், சாவகச்சேரி), சங்கரநாதன், சையிலா (U.K), லோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, யமுனா ஆகியோரின் மாமனும் பவிகா, பாவனா, தர்ணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தானபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் சந்தி, நுணாவில்.* — *தகவல்: பரமேஸ்வரி (மனைவி).*

### திருமதி சேவியர் ஸ்ரனிஸ்லொஸ் (பீற்றர்) கோமளவல்லி

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சேவியர் ஸ்ரனிஸ்லொஸ் கோமளவல்லி 24.03.2007 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சேவியர் ஸ்ரனிஸ்லொஸ்ஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் திரு.திருமதி மனுவேற்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கருணாநிதி, பிரான்சிஸ்கா ஆகியோரின் அன்புத் தாயும் ரேணுகா, எட்மன் வரதராஜா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நடராசா, அருட்சகோதரி மேரிவிக்ரறின் (ஓய்வுபெற்ற அதிபர், தி.கு.கன்னியர் மடம், இளவாலை), லீலாவதி, யோசப்பூராசா, புவனேஸ்வரி, பழனிநாதன், இலட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசமணி, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற கந்தையா, நாகரெத்தினம், சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் டினேஷ், வனிஜா, ஸ்ரீபன், தர்ஷன், எஸ்தர், பிபிடா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.17, அரசடிலேன், யாழ்ப்பாணம்.* — *தகவல்: க.புவனேஸ்வரி (சகோதரி), எ.வ.பிரான்சிஸ்கா (செல்வி-மகள்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொண்டு பேசியதை அடுத்து ஓமந்தை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியது. (அ-1)

## வாகரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்களில் பொலீஸாரும் கூடவே சென்றனர்.

★ வாகரை, திருமலைக்கு மீளக்குடியமரச் செல்லாவிடில் குடும்ப அட்டைகள், கூடாரங்கள், நிவாரண உணவுப் பொருள்கள் மீளப்பெறப்படும்; நிறுத்தப்படும் என்று அதிகாரிகள் பயமுறுத்தினர்.

★ மீளக்குடியமரச் செல்வதற்கு மறுத்தால் சம்பந்தப்பட்டவர்களின் பாதுகாப்புக்கு கிராம சேவையாளரோ அல்லது பிரதேச செயலர்களோ பொறுப்பேற்க மாட்டார்கள் என்று கூறப்பட்டமை.

- அதாவது இராணுவத்தினரோ பொலீஸாரோ எவரையும் கைது செய்தாலோ, தடுத்து வைத்தாலோ அல்லது தாக்கப் போவதாகப் பயமுறுத்தினாலோ கிராம சேவையாளரோ அன்றி பிரதேச செயலாளரோ அதில் தலையிட்டு உதவமாட்டார்கள் என்று மறைமுகமாக உணர்த்தப்பட்டது.

அகதிகள் மீளக்குடியமர்த்தப்பட்ட நாள்களில் - இம்மாதம் ஆறாம் திகதி தொடக்கம் தொண்டர் அமைப்புகளின் நேரடிச் செயற்பாடுகளைத் தடுக்கும் விதத்தில் கையடக்கத் தொலைபேசிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. தொண்டர் நிறுவனங்களின் அலுவலர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதமும் குறைந்து காணப்பட்டது. அகதிகளின் தேவைகளையும் விருப்பு வெறுப்புகளையும் அறிவதற்கான பணிகளைத் தடுக்கும் விதத்திலான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் அந்த ஆய்வு மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னமும் ஸ்திரமற்ற நிலையே காணப்படுவதாகவும், கிளைமோர் தாக்குதல்கள், மறைந்திருந்து நடத்தும் தாக்குதல்கள், துணைப் படைகளின் அதிகரித்த நடமாட்டம் ஆகியன தொடர்வதாகவும் ஐ.ஏ.எஸ்.சியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பல குடும்பத் தலைவர்கள் தொழிலுக்கு அல்லது வேறு அலுவல்கள் நிமித்தம் தூரச் சென்ற தருணம் பார்த்து பெண்களும் குழந்தைகளும் பலவந்தமாக பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டு இடம்பெயர்த்தப்பட்டனர் என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் தலைமைப் பேச்சாளரான றொன் றெட்மொன்ட் ஜெனிவாவில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டதும் -

கிழக்கில் போர் அகதிகளை மீளக்குடியேற்றும் அரசின் செயற்பாடுகளில் இருந்து ஐ.நா. விலகிக்கொள்கின்றது. அகதிகளை மீளக்குடியேற்றுவதற்கான உகந்த புறச்சூழ்நிலை உருவாகவில்லை என்று அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி அமின் அவாட் கருத்து வெளியிட்டதும் - ஏற்கனவே உதயன் செய்திகளில் விவரிக்கப்பட்டிருந்தன. (அ)

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கு இலங்கை ஒரு செயற்குழுவை அழைக்கவேண்டும் என மனித உரிமைகள் காப்பகம், கொலம்பியன் நீதியாளர்கள் ஆணைக்குழு, அனைத்துலக ஆணையாளர் ணகள் ஆணைக்குழு ஆகியன தமது இணைந்த அறிக்கையில் இக்கூட்டத் தொடரில் தெரிவித்திருந்தன.

எனவே இந்நிலையில் இலங்கையில் நடைபெற்று வரும் காணாமல்போதல், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அனைத்துலக மன்னிப்புச்சபையைச் சேர்ந்த பீற்றர் ஸ்பிரிலின்ரர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இலங்கை அரசாங்க செயற்குழு உறுப்பினர்களை அழைப்பதற்குரிய காலத்தை அறிவிப்பதுடன் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களையும் தெரியப்படுத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் பேசிய ஜேர்மன் தூதுவர் அன்றஸ் பேர்க் தெரிவித்திருந்தார்.

யாழ்.மாவட்டத்திலும் கொழும்பின் ஏனைய பகுதிகளிலும் 700 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு செயற்குழு ஏதாவது விசேட பரிந்துரைகளை மேற்கொள்ள உள்ளதா? சுவிற்லாந்து தூதுவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

தயான் ஜெயதிலக்கா வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அமைச்சராக சில காலம் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பெரியதம்பனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இத்தாக்குதலில் 60க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் 150க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் - என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### ஆறுபேர் வீரச்சாவு

இத்தாக்குதலில் தமது தரப்பில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் படையினர் விட்டுச்சென்ற பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### 9 படையினர் பலி

இதேவேளை -

ஓமந்தைக்கு மேற்கேயும் மன்னாருக்குக் கிழக்கேயும் சிதறி ஓடிய விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து தமது முன்னரங்கப் பகுதிகளை நோக்கித் தாக்குதல்களை நடத்தியதாக இராணுவத் தரப்பில் நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள், ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை விட்டு விட்டு நடத்தி வருவதாகவும் இராணுவத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்த வேளையில் ஒன்பது படையினர் உயிரிழந்ததாகவும் நால்வர் காயமுற்றதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் டாக்டர்களுக்குப் பற்றாக்குறை

பருத்தித்துறை வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வைத்தியசாலைக்கு சுமார் 50 வைத்தியர்கள் தேவையான நிலையில் தற்போது பொது வைத்திய சிகிச்சை ஒரு வைத்தியருடன் மட்டுமே நடைபெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில் இப்போது சேவைபுரியும் வைத்தியரும் இடம்மாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார்.

இதேவேளை - மகப்பேற்று வைத்தியராக ஒரு வருடகாலமாக இங்கு கடமை புரிந்து வரும் வைத்தியரும் இம்மாதத்துடன் வெளிநாடு செல்லவுள்ளார் என்று அறியப்படுகிறது.

கடந்த மூன்று வருடங்களாக மேற்படி வைத்தியசாலையின் நிலைபற்றி வைத்தியசாலை நிர்வாகம் சுகாதாரப் பிரிவின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

ஆயினும், இது வரையும் இவ்விடயம் தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்களும் மக்கள் தரப்புகளும் கவலை தெரிவிக்கின்றன. (அ-70-203)

## வாகரை மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் நிலையைத் தெரிந்து கொள்வதற்காக அங்கு சென்றோம்.

இங்கு மீளக்குடியமர்ந்துள்ள 3ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு ஒருவாரத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் எடுத்துச் சென்றோம்.

மக்களின் ஆதங்கங்களை அங்கு அறிய முடிந்தது. சொந்த ஊருக்குத் திரும்பியதில் அவர்களுக்கு மனத்திருப்தி உள்ளது.

இருப்பினும், அங்கு வசதிகள் செளகரியங்கள் இல்லை. மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடிய நிலைமைகள் அறவே இல்லை.

இந்நிலையில் நாம் இராணுவப் பொறுப்பதிகாரிகளைச் சந்தித்து மக்களை அவர்களின் சொந்த வீடுகளுக்குச் சென்று வசிப்பது தொடர்பாகப் பேசினோம்.

பாரிய ஷெல் தாக்குதல்களால் வீடுகள், மரங்கள் என்பன சேதமடைந்துள்ளன. இன்னமும் அவை துப்புரவு செய்யப்படவில்லை. இதன் காரணமாக உடனடியாக மக்களை அவர்களது வீடுகளில் குடியமர்த்த முடியாது என்று படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்குள்ள மக்களுக்கு உணவு, உறைவிடம் என்பனவே அவசியம் தேவையாக உள்ளன. இவர்களது இத்தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டியது அரசின் கடமை. அரசு தனியே இத்திட்டத்தை மேற்கொள்ள முன்வராது. நிதி இல்லை என்று கைவிரித்து விடும்.

எனவே, இந்த மக்களின் மறுவாழ்வுப் பணிகளுக்கு உதவ சர்வதேசம் முன்வர வேண்டும். உதவ முன்வருமாறு சர்வதேசத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். சர்வதேசம் ஒன்றிணைந்தால்தான் இதற்கு ஈடுகொடுக்க முடியும் - என்றார் அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை. (அ-203)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மேலதிக ஆசன வசதிகள் இப்போது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் ஒன்றுவிட்ட ஒருநாள் சேவையில் ஈடுபட்டுவருவது தெரிந்ததே. (அ-1-151)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டது. ஒரு கால் வீதியிலும் மற்றைய கால் காவலரண் பகுதியிலும் காணப்பட்டன.

மீட்கப்பட்ட உடல் உறுப்புக்களை யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்குமாறும் சடலத்தை உறவினர்கள் மூலம் அடையாளம் காணுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

தற்கொலைக் குண்டுதாரியின் காற்சட்டையில் இருந்து இரு அடையாள அட்டைகள் மீட்கப்பட்டன. தேசிய அடையாள அட்டை, இராணுவம் வழங்கிய அடையாள அட்டை ஆகியனவே அவையாகும்.

### இரண்டு அடையாள அட்டைகள் வைத்திருந்தார்

சோதிலிங்கம் நிரஞ்சன் என்ற பெயரைக் கொண்ட அந்த அடையாள அட்டையில், தேசிய அடையாள அட்டையின் '152, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியும் இராணுவ அடையாள அட்டையில் '344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியும் 10.03.87 இல் பிறந்தவர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

### சோதனையிட முயன்றபோது...

வீதித் தடைமுகாமில் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவர் குறிப்பிட்ட நபர் மீது சந்தேகம் கொண்டு அவரைச் சோதனையிட முனைந்தார் என்றும் -

அப்போது அவர் தடைமுகாமில் இருந்து ஓட முயன்றார் என்றும் -

சிப்பாய் அவரைத் துரத்திச் சென்று நெருங்கிய வேளை அந்நபர் குண்டை வெடிக்கவைத்தார் என்றும்-

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் மையம் நேற்றுத் தெரிவித்தது. (அ-1-8-68)


## கண்ணீர் அஞ்சலி

யா/தாவடி இ.த.க.பாடசாலை அதிபரும், உடுவில்கல்விக் கோட்ட அதிபர் நலன்புரிச் சங்க செயலாளருமான சு.சண்முககுலகுமாரன் அவர்களின் அன்பு மாமி

**திருமதி சுந்தரலிங்கம் பொன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்களும்
உடுவில் கல்விக்கோட்டம்.


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை இராசேந்திரம் (ராசன்)

அளவெட்டி தெற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 3ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசேந்திரம் நேற்று(24.03.2007)சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் செல்லத்துரை (அமரர்) - யோகம்மா தம்பதியரின் மூத்த மகனும் வசந்தமலரின் (ஜெந்தா) அன்புக் கணவரும் வியானா, தீபனா, தனுஷன், கபிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசேஸ்வரி, ராசமலர், ரவிச்சந்திரன் (ஜேர்மனி), கமலதாஸன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிப்பிள்ளை - நல் லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதி, பரமேஸ்வரி, ராசலிங்கம், தணிகாசலம் (சிறி), குமார் (அமரர்), வசந்தா, சிவம், மினா சித்தம்பி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.


**கார் விற்பனைக்கு**

டாக்டரின் பாவனையிலுள்ள ரொயாட்டா ரக 17-XXXX தொடர் இலக்க கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு : தொ.பே.:222 3153

**விற்பனைக்கு**

தரம் 1முதல் 10 வரையான பாடசாலைக் கணிப்பீட்டு அறிக்கைகள் விற்பனைக்குண்டு.

தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.:2881

**CATWAS.COM**
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805

புதிய பிரிவுகள் ஆரம்பம்

DIPLOMA COURSES
Ms Office
DTP
Hard Ware

CERTIFICATE COURSES
Word XP/2003 Page Maker 7.0
Access XP/2003 Photo Shop 7.0
Excel XP/2003 Corel Draw 11.0
Power Point XP/2003 HTML
Kids Program

பதிவுகளை 28.03.2007 க்கு முன்னர் மேற்கொள்ளவும்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா இராசம்மா (சங்கானை)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் சந்தி ஒழுங்கை, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இராசம்மா நேற்று (24.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி கந்தையாவின் (கட்டட ஒப்பந்தகாரர்) மனைவியும் மகாலிங்கம்(முன்னாள் கிளை முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.ச), யோகேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் தங்கேஸ்வரி, இரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, பாக்கியம் மற்றும் அப்புத்துரை(உரும்பிராய்) ஆகியோரின் சகோதரியும் அனுஷா -ரமேஸ் (ஜேர்மனி), அஜந்தா - ஜெயசீலன் (ஜேர்மனி), பிரதீபன்(பிரான்ஸ்), அனுப்பிரியா, அனிதா, ஜேர்மனியில் வசிப்பவர்களான சுதர்சன், மாதுரி, சுபாஜினி, சுரேஸ், சுரேக்கா, சுஜீனா ஆகியோரின் பேர்த்தியும் ஜேர்மனியில் வசிப்பவர்களான செயோன், ஹரிஸ், செளமியா, செளயனா, செந்தூரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.03.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தி ஒழுங்கை,
சங்கானை.

(சி/50860)

தகவல்:
க.மகாலிங்கம்(மகன்).

### திருமதி சுந்தரலிங்கம் பொன்னம்மா



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் பொன்னம்மா நேற்று (24.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து சுந்தரலிங்கத்தின்அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் கனகம்மா, இரத்தினம் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் சுந்தரராஜன்(ஜேர்மனி), சுகுமார்(சுவிஸ்), சுரேந்திரன் (சுவிஸ்), சுசீந்திராதேவி சுதேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின்அன்புத் தாயும் சண்முககுலகுமாரன் (அதிபர், யா/தாவடி இ.த.க. பாடசாலை), தேவிகா (ஜேர்மனி),சுமதி (சுவிஸ்), நிரஞ்சனா (சுவிஸ்),தயாவதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சஜீவன், சரவணன், சுதியன், சுவியன், நிசானா,சாருஜன், சுதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(25.03.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(59036)

தகவல்: சு.சண்முககுலகுமாரன்
(மருமகன்).
(அதிபர், யா/தாவடி இ.த.க. பாடசாலை)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org